தினமணி

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 25 Dec 2011 11:00:36 AM IST

உதகை, டிச. 24: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட 33 கோரிக்கை மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் விதமாக கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை தோட்டக்கலைத்துறை மூலம் விநியோகிப்பது, காய்கறி விதைகள், நாற்றுகள் விவசாயிகளுக்கு வழங்குவது, வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பது, விவசாயிகளுக்கு சிட்டா வழங்கும் நடைமுறையை எளிமையாக்குவது உள்பட பல்வேறு விவசாயிகள் பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. நீலகிரி மாவட்ட உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம், குருமுருக நந்தி கவுடர் சங்கம் உள்பட பல்வேறு விவசாய சங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**டிச.29 -ல் பயறு வகை சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 25 Dec 2011 01:55:22 PM IST

புதுக்கோட்டை, டிச. 24: புதுக்கோட்டை அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தானியம் மற்றும் பயறுவகை சாகுபடி குறித்த தொழில் நுட்பப்பயிற்சி டிச. 29 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தானியம் மற்றும் பயறு வகைகள் பெருமளவு சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடைக்குப் பிறகு அவற்றை சரியான முறையில் உலர்த்துவது, பதப்படுத்துவது மற்றும் தரமற்ற சேமிப்பு முறை போன்ற காரணங்களால் விதை மற்றும் தானியங்கள் தரத்தை இழந்து விளை பொருளில் இழப்பு ஏற்படுகிறது.

எனவே, பயிருக்கு ஏற்ற அறுவடை, பின்சார் தொழில்நுட்பங்களைக் கையாண்டு தரமான விதை அல்லது தானியங்களைப் பெற்று அதிக லாபம் பெற முடியும்.

இது தொடர்பாக வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் வியாழக்கிழமை (டிச. 29) பயிற்சி நடைபெறவுள்ளது.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், பயறு வகை சாகுபடி செய்வோர் பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

மேலும், விவரங்களுக்கு 04322- 290321 என்ற தொலைபேசி மற்றும் 95782 50822 அலைபேசியிலும் தொடர்பு கொள்ளலாம்.

**வேளாண் துறையில் வேலைவாய்ப்பு**

First Published : 25 Dec 2011 03:34:21 PM IST

விழுப்புரம், டிச.24: விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண்துறை மூலம் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டப் பணிகளை வட்டார அளவில் மேற்கொள்ள அனைத்து வட்டாரங்களிலும் வட்டார தொழில் நுட்ப மேலாளர் மற்றும் பொருள் சிறப்பு அலுவலர் பணிக்கான பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளனர் என்று மாவட்ட ஆட்சியர் கா.த. மணிமேகலை (படம்) தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் கூறியிருப்பது:

மாவட்ட அளவில் கணக்காளர் மற்றும் கணினி இயக்குபவர் பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது.

பணி, தகுதிகள் மற்றும் ஊதிய விவரம்: வட்டார தொழில்நுட்ப மேலாளர் பணிக்கு தொகுப்பூதியம் மாதம் ரூ. 20,000, கல்வித்தகுதி - வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல் துறை, மீன் வளம், பட்டுவளர்ச்சி, பொருளாதாரம், கால்நடைத்துறை ஆகிய ஏதேனும் ஒன்றில் இளங்கலை பட்டம் , கணினியில் பயிற்சி மற்றும் அனுபவம்.

பொருள் சிறப்பு அலுவலர் பணிக்கு தொகுப்பூதியம் மாதம் ரூ. 8,500, கல்வித்தகுதி - வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வளம், பட்டுவளர்ச்சி, பொருளாதாரம், கால்நடைத்துறை ஆகிய ஏதேனும் ஒன்றில் இளங்கலை பட்டம் மற்றும் அனுபவம்.

கணக்காளர், தொகுப்பூதியம் மாதம் ரூ.21,000, கல்வித் தகுதி: பி.காம் பட்டதாரி மற்றும் 3 ஆண்டுகள் அனுபவம்.

கணினி இயக்குபவர், தொகுப்பூதியம் மாதம் ரூ.12,000, பி.டெக் அல்லது எம்.சி.ஏ பட்டம் பெற்று ஒரு ஆண்டு அனுபவம் உள்ளவர்கள்.

மேற்கண்ட பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான நபர்கள், "திட்ட இயக்குநர், வேளாண்மை இணை இயக்குநர், அட்மா திட்டம், விழுப்புரம்' என்ற முகவரிக்கு வெள்ளைத்தாளில் சான்றிதழ்கள் நகலுடன் ஜனவரி 5-ம் தேதிக்குள் விண்ணப்பித்தினை அனுப்பலாம் என்று அந்த செய்திக்குறிப்பில் ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் - 83.80 அடி**

First Published : 25 Dec 2011 10:56:17 AM IST

ஈரோடு, டிச. 24: பவானிசாகர் அணை நீர்மட்டம் சனிக்கிழமை 83.80 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,097 கன அடி தண்ணீர் வந்தது.

ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி, வாய்க்காலில் விநாடிக்கு 2,100 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 17.75 டிஎம்சி.

சாயக்கழிவு பிரச்னை: 28-ல் உண்ணாவிரதம்

ஈரோடு, டிச. 24: சாயக்கழிவுப் பிரச்னைக்குத் தீர்வு கோரி உண்ணாவிரதம் இருப்பதாக இரு கிராம மக்கள் அறிவித்துள்ளனர்.

÷ஈரோடு, சூரியம்பாளையம், கொங்கம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் வியாழக்கிழமை அளித்த மனு விவரம்: சூரியம்பாளையம் பகுதியில் தோல் தொழிற்சாலையில் இருந்தும், கொங்கம்பாளையம் பகுதியில் சாயப்பட்டறைகளில் இருந்து கழிவு நீரும் அதிகளவில் வெளியேற்றப்படுகிறது.

÷சுத்திகரிப்பு செய்யப்படாமல், வெளியேற்றப்படும் கழிவு நீரால், அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள், குடிநீர் போன்றவை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

÷அப்பகுதியினர் பல முறை முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. தவிர, புதிது புதிதாக பல சாயப்பட்டறைகள் தொடர்ந்து உருவாகி வருகிறது. இவற்றை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பிரச்னையை தீர்க்க வலியுறுத்தி வரும் 28-ம் தேதி உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மீன் வளர்க்க மானியம்: விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

First Published : 25 Dec 2011 10:55:27 AM IST

ஈரோடு, டிச. 24: மானிய உதவி பெற்று மீன் வளர்க்க விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

÷மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தெரிவித்தது: தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மீன் வளத்துறை மூலம், மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க, 50 சத (ஐந்து லட்சம் ரூபாய்) மானியம் வழங்கப்படுகிறது. ÷ரூ.10 லட்சம் மதிப்பில், ஆண்டுக்கு ஒரு கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யக்கூடிய, மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை அமைக்க உள்ள இடம், அதற்கு தகுதியானதாகவும், வெள்ள அபாயம் உள்ள பகுதிக்கு வெளியேயும் இருக்க வேண்டும். நல்ல தரமான நில நீர் அல்லது ஆற்றுப் பாசன பகுதியில் மின் வசதி, சாலை வசதி கொண்டதாக இருக்க வேண்டும்.

÷மீன் குஞ்சு உற்பத்தி மையம் புதிதாக அமைக்க இரண்டு ஹெக்டேர் சொந்த நிலம் அல்லது பத்து ஆண்டு குத்தகை பெற்றிருக்க வேண்டும். அதிக விவசாயிகள் விண்ணப்பம் செய்தால், தகுதி அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.÷மீன் வள உதவி இயக்குநர், உள்நாட்டு மீன் வளம், 4 எஸ்வி காம்ப்ளக்ஸ், வீரப்பம்பாளையம் பிரிவு, பெருந்துறை ரோடு, திண்டல் அஞ்சல், ஈரோடு-12 என்ற முகவரியில் அணுகி, விண்ணப்பம் பெற்று, உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

**29-ல் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம்**

First Published : 25 Dec 2011 04:19:27 PM IST

காஞ்சிபுரம், டிச, 24: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் வரும் 29-ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

இதில் விவசாயிகள் கலந்து கொண்டு வேளாண்மைத் துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான தங்களின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கூறலாம். மேலும், கோரிக்கை மனு அளிக்க விரும்பும் விவசாயிகள் காலை 9 மணியில் இருந்து கூட்ட அரங்கில் மனுக்கள் அளித்து ஒப்புகை ரசீது பெற்றுக் கொள்ளலாம் என ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முட்டை விலை 2 காசுகள் உயர்வு**

First Published : 25 Dec 2011 11:38:36 AM IST

நாமக்கல், டிச.24: நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஒன்றின் விலை சனிக்கிழமை 2 காசுகள் உயர்த்தப்பட்டது. இதற்கான முடிவு நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் கூறியது: கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு கேக் தயாரிப்பதற்காகவும், கூடுதல் அளவிலான முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், புத்தாண்டு கேக் உற்பத்தியும் தற்போதே தொடங்கிவிட்டது. இதனால் தமிழகத்திலும், வடமாநிலங்களிலும் முட்டையின் தேவை இருமடங்காகியுள்ளது. அதற்கேற்ப முட்டையின் விலை 2 காசுகள் உயர்த்தப்பட்டு, 315 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வடமாநிலங்களில் குளிர்காலம் முடிவுக்கு வரும் வரை முட்டை விலை ஏறுமுகமாகவே இருக்கும்.

**மாவட்டத்தில் 2,150 பசுமை வீடுகள்**

First Published : 25 Dec 2011 04:09:52 PM IST

கும்மிடிப்பூண்டி,டிச. 24: திருவள்ளூர் மாவட்டத்தில் 2,150 பசுமை வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளதாக தமிழக சுற்றுச்சூழல் அமைச்சர் பி.வி.ரமணா தெரிவித்தார்.

÷கும்மிடிப்பூண்டி அடுத்த ஆரம்பாக்கத்தில் தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் கே.ஆறுமுகம் தலைமை தாங்கினார். ஒன்றியக் கவுன்சிலர் தேசமுத்து முன்னிலை வகித்தார். துணை தலைவர் அம்மு பாபு வரவேற்றார்.

÷மாவட்டக் குழு தலைவர் பி.ரவிச்சந்திரன், கும்மிடிப்பூண்டி ஒன்றியக் குழு தலைவர் குணம்மா கோபால் நாயுடு உள்ளிட்டோர் பேசினர். விழாவில் 130 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகளை வழங்கி தமிழக சுற்றுச்சூழல் அமைச்சர் பி.வி.ரமணா சிறப்புரையாற்றியது: ÷ஏழை எளிய, குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களை அதிக பயனாளர்களாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் வாழ்வில் பொருளாதார மேம்பாடு அடையும் வகையில் ரூ.12 ஆயிரம் மதிப்புள்ள 4 ஆடுகள் 8 லட்சம் பயனாளிகளுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

÷தமிழக அரசின் பசுமை வீடு திட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக 2,150 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பசுமை வீடுகள் கட்டித் தரும் பணி நடைபெற்று வருகிறது என்றார்.

÷கும்மிடிப்பூண்டி ஒன்றிய அ.தி.மு.க செயலாளர் கோபால்நாயுடு, முன்னாள் எம்.எல்.ஏ கே.எஸ்.விஜயகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் ரமேஷ்குமார், ஷியாமளா தன்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ÷ஊராட்சி செயலாளர் முரளி நன்றி கூறினார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**உளுந்து சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2011,00:59 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் : வைடிப்பாக்கத்தில் விவசாயிகளுக்கு உளுந்து சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி நடந்தது. கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம் மூலம் செயல்படும் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் கெடிலம் உபவடி நிலப்பகுதி விவசாயிகளுக்கு உளுந்து சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்கள் குறித்து ஒரு நாள் பயிற்சி நெல்லிக்குப்பம் அடுத்த வைடிப்பாக்கத்தில் நடந்தது. பயிற்சியை கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் நசீர் அகமது துவக்கி வைத்தார். இணை பேராசிரியர் துரைசாமி நீர் வளத் திட்டம், உளுந்து சாகுபடியில் ஒருங்கிணைந்த உரமேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து விளக்கினார். தொடர்ந்து உளுந்து சாகுபடியில் முக்கிய தொழில் நுட்பங்களான விதை நேர்த்தி, வரிசை விதைப்பு, டி.ஏ.பி., கரைசல் தெளிப்பு, வெள்ளை ஈ மற்றும் புரோடீனியாப் புழு மேலாண்மை பற்றி செயல் விளக்கம் அளிக்கப்பட்டன.

**மரவள்ளி நலவாரியம் அமைக்கவிவசாயிகள் கூட்டத்தில் தீர்மானம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2011,02:38 IST

ராசிபுரம்: "கூட்டுறவு சேகோ ஆலை, மரவள்ளி நலவாரியம் அமைக்க வேண்டும்' என, மரவள்ளி கிழங்கு பயிர் விவசாயிகள் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.ராசிபுரத்தில், விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு கூட்டம் நடந்தது. விவசாயிகள் சங்க மாநில தலைவர் சிவசாமி தலைமை வகித்தார். உறுப்பினர் குமரேசன் வரவேற்றார். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் செங்குட்டுவேல், விவசாய சங்க தலைவர் செல்லமுத்து, தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி, மாவட்ட விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் வேலப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில், மத்திய அரசு, மரவள்ளிக் கிழங்கை, மூன்றாவது உணவு பொருளாக அறிவிக்க வேண்டும்.

ஜவ்வரிசியில், ரசாயன பொருட்கள் சேர்த்து உற்பத்தி செய்வதை தடை செய்ய வேண்டும். சேலம் கூட்டுறவு சேகோ சர்வ் நிறுவனத்திலும், வெளி மார்க்கெட், மாநிலங்களில் நேரடியாக விற்பனை செய்யப்படும் ஜவ்வரிசி, உணவு பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம், உலக வர்த்தகம் தரச் சட்டத்தின்படி உற்பத்தி செய்வதை ஆராய வேண்டும்.மரவள்ளி கிழங்கு டன் ஒன்றுக்கு, 50 கிலோ மண் கழிக்கக் கூடாது. எலக்ட்ரானிக் ஸ்கேல் அமைத்து, 28 புள்ளிகளுக்கு மேல் விலை கொடுக்க வேண்டும். கூட்டுறவு சேகோ ஆலை, மரவள்ளி நலவாரியம் அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.கூட்டத்தில், விவசாயிகள் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**செண்டுமல்லி செடி பாதுகாப்புகுறித்து வேளாண் அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2011,02:38 IST

நாமக்கல்: "செண்டு மல்லியில், தண்டழுகல் நோய் காணப்பட்டால், அவை மேலும் பரவாமல் தடுக்க செடியை பிடுங்கி அழிக்க வேண்டும்' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:செண்டு மல்லி செடியை நாற்றழுகல் நோய், இலைப்புள்ளி நோய், தண்டழுகல் நோய், பூ மொட்டு அழுகல் நோய் போன்றவை தாக்கும். நாற்றழுகல் அழுகல் நோய், செடியின் அடித்தண்டு, வேரில் சேதத்தை ஏற்படுத்தும்.இதைக் கட்டுப்படுத்த, ஒரு கிலோ விதைக்கு, இரண்டு கிராம் என்ற அளவில் கேப்ரான் மருந்து மூலம் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

இலைப்புள்ளி நோய் இலைகளின் மேற்பரப்பில் வட்ட, நீள் வட்ட வடிவில் சாம்பல் நிறப் புள்ளிகளாக காணப்படும். அதைக் கட்டுப்படுத்த, காப்பர் ஆக்ஸி குளோரைடை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
தண்டுழுகல் நோய் தாக்குதல் காணப்பட்டால், அவை மேலும் பரவாமல் தடுக்க, அந்நோய் தாக்கப்பட்ட செடிகளை பிடுங்கி அழிக்க வேண்டும். அல்லது கம்பேனியன் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில், ஒரு மில்லி லிட்டர் என்ற அளவில் கலந்து தெளிக்கலாம்.பூ மொட்டு அழுகல் நோய், செடியில் உள்ள மலராத மொட்டுகளை தாக்கும். இந்நோய் தாக்கிய மொட்டுகளில், கரும் பழுப்பு நிறப்புள்ளிகள் தோன்றும். நோய் தாக்கப்பட்ட மொட்டுகள் மலராது. இந்நோய் மேலும் பரவாமல் கட்டுப்படுத்த, தாக்கப்பட்ட செடிகளை உடனே பிடுக்கி அழிக்க வேண்டும் அல்லது போர்டோ கலவை ஒரு சதம் மண்ணிற்குள் செலுத்தி, இந்நோய் பரவாமல் தடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிறுதானிய பயிர் சாகுபடி அதிகரிக்க திட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 26,2011,01:20 IST

கருத்தை பதிவு செய்ய

கிருஷ்ணகிரி: ""கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிறுதானியங்கள் குறிப்பாக ராகி மற்றும் சாமை சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், அதன் மகசூலை பெருக்கவும் "நியூட்ரிசீரியல்ஸ்' என்ற புதிய திட்டம் இந்தாண்டு முதல் செயல்படுத்தப்படும்," என கலெக்டர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.ஓசூரில் மாநில அளவிலான ராகி மற்றும் சாமை சாகுபடி குறித்த ஒருநாள் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடந்தது.

கலெக்டர் மகேஸ்வரன் தலைமை வகித்து கண்காட்சியை துவக்கி வைத்தார். வேளாண் இணை இயக்குனர் நாச்சியப்பன் முன்னிலை வகித்தார்.ஓசூர் வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜன் திட்ட விளக்கவுரையாற்றினார். ராகி விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்தில் இடுபொருட்களை வழங்கி கலெக்டர் மகேஸ்வரன் பேசியது:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏறக்குறைய, 50 ஆயிரம் ஹெக்டேரில் மானாவாரியில் ராகி மற்றும் சாமை சாகுபடி செய்யப்படுகிறது. ராகி மாவு, களி, தோசை, ரொட்டி உள்ளிட்ட ஏராளமான தரமிக்க ஊட்டச்சத்துள்ள உணவாக உள்ளது.

மனிதனுக்கு முக்கிய உணவாக உள்ள ராகி மற்றும் சாமை சாகுபடி பரப்பை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகரிக்க மத்திய அரசின் திட்டமான ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் "நியூட்ரிசீரியல்ஸ்' என்ற புதிய திட்டம் இந்த ஆண்டு முதல் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக ஓசூர், சூளகிரி, கெலமங்கலம், தளி ஆகிய வட்டாரங்களில், 500 ஹெக்டேரில் ராகி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 100 சதவீதமானியத்தின் கீழ், மூன்று ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இடுபொருட்கள் ஏக்கர் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது.இதே போல் மத்தூர் மற்றும் ஊத்தங்கரை பகுதியில், 200 ஹெக்டேரில் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கும் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. தரமான விதை, சரிசமமான உரவு அளவு, பயிர் பாதுகாப்பு ஆகியவை அடங்கிய சிறந்த தொழில் நுட்பம் கொண்டு ராகி மகசூலை அதிகப்படுத்தி விவசாயிகளுக்கு வருவாயை பெருக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.சாதாரண அல்லது இடைவெளி இல்லாத விதைப்பு முறை மூலம் ஒரு ஹெக்டேரில், 1,500 கிலோ ராகி மகசூல் கிடைக்கும். ஆனால் "நியூட்ரிசீரியல்ஸ்' திட்டத்தின் மூலம் சாகுபடி செய்யப்படும் ராகி ஒரு ஹெக்டேரில், 2,350 கிலோ மகசூல் கிடைக்கும்.

இதன் மூலம் விவசாயிகள் ஹெக்டேருக்கு, 850 கிலோ ராகி அதிக மகசூல் கிடைத்து

விவசாயிகளுக்கு, 8,500 ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும். விவசாயிகள் இந்த திட்டத்தை பயன்படுத்தி ராகி சாகுபடி செய்யும் பரப்பை அதிகரித்து அதிக மகசூல் எடுத்து பயன் பெறலாம்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.பையூர் மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் விஜயபாஸ்கரன், டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தரராஜ், வேளாண் இணை இயக்குனர் ஜபருல்லா, உதவி இயக்குனர் ரவீந்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**இயற்கை வேளாண் முறையே விவசாயத்தை பாதுகாக்கும்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 25,2011,22:59 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி :"விவசாயிகள் செலவில்லா இயற்கை வேளாண் முறைக்கு மாற வேண்டும்' என, வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பலேக்கர் பேசினார். பொள்ளாச்சி தொழில்வர்த்தக சபை சார்பில் நடந்த செலவில்லா இயற்கை வேளாண்மை கருத்தரங்கு (ஜீரோ பட்ஜெட்) 5 நாட்கள் நடந்தது. மகாராஷ்டிரா வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பலேக்கர் கருத்தரங்கை நடத்தி, செலவில்லா இயற்கை வேளாண் முறைகள் பற்றி தெரிவித்தார். கருத்தரங்கு நிறைவு விழாவில், தொழில்வர்த்தக சபை செயலாளர் கண்ணன் வரவேற்றார். தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

பொள்ளாச்சி எம்.பி., சுகுமார் பேசியதாவது:

தென்னை விவசாயத்தை பாதுகாக்க கொப்பரை கிலோவுக்கு 80 ரூபாய் வழங்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தியுள்ளோம். உரவிலை உயர்வு, உரத்தட்டுப்பாடு, ஆட்கள் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்கள் விவசாயிகளை இயற்கை வேளாண் முறைக்கு இழுத்துக்கொண்டு செல்கிறது. இயற்கை வேளாண் முறைக்கு மாறினால் தான் வருங்காலத்தில் விவசாயத்தை பாதுகாக்க முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

தமிழகத்தின் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் அரசு பல்வேறு பணிகளை துவங்கியுள்ளது. தற்போது ஆண்டுக்கு 80 ஆயிரம் டன் உள்ள உணவு உற்பத்தியை அடுத்த ஆண்டு ஒரு லட்சத்து 10 ஆயிரம் டன்னாக உயர்த்த வேண்டும் என்று இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இதற்காக பல்வேறு புதிய தொழில்நுட்பங்களையும் அரசு புகுத்தியுள்ளது. இந்நிலையில், அழிவு இல்லாத இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க அரசு தயாராக உள்ளது. வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பலேக்கர் தெரிவித்த கருத்தை முதல்வரிடம் தெரிவித்து, அதற்கேற்ப திட்டங்கள் உருவாக்க முயற்சிப்போம் என்றார். விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கி கோவை வேளாண் துறை இணை இயக்குனர் இளங்கோ பேசுகையில், "உணவு உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், விவசாயிகளுக்கு மூன்று மடங்கு லாபம் கிடைக்க திட்டமிட வேண்டும் என்று முதல்வர்

உத்தரவிட்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் செயற்கை உரங்களுக்கு மானியமாக 90 ஆயிரம் கோடி செலவிடப்படுகிறது. இந்நிலையில், உரத்தட்டுப்பாடு நிலவுவதால் விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு மாறி வருகின்றனர்' என்றார்.

வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பலேக்கர் பேசுகையில், "கருத்தரங்கு எத்தனை நாள் நடந்தது, எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் என்பது முக்கியமல்ல. கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களின் எத்தனை பேர் இயற்கை வேளாண் முறைக்கு மாறினார்கள் என்பது தான் முக்கியம். கருத்தரங்கில் கலந்து கொண்ட விவசாயிகள், செலவில்லா இயற்கை வேளாண் முறையை கடைபிடிக்கும் தோட்டத்திற்கு சென்று பார்வையிட்டு, கள அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்' என்றார்.

### இந்திய தேயிலை இறக்குமதி 14 % சரிவு

டிசம்பர் 25,2011,13:12



புதுடில்லி : நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான கால அளவில் இந்தியாவின் தேயிலை இறக்குமதி 14 சதவீதம் குறைந்துள்ளது. 6 மாதங்களில் 9.91 மில்லியன் கிலோ அளவிற்கே தேயிலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இந்திய தேயிலை கழகம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டின் இதே கால அளவில் 11.55 மில்லியன் கிலோ அளவிற்கு தேயிலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே போன்று அர்ஜெண்டினா, ஈரான், ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளிலும் நடப்பு நிதியாண்டின் முதல் 7 மாதங்களில் தேயிலை இறக்குமதி சரிவடைந்துள்ளது. கென்யா, மல்லாவி, நேபாளம், அர்ஜெண்டினா, ஈரான், இலங்கை, சீனா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியா அதிகளவிலான தேயிலை இறக்குமதி செய்து வருகிறது. ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான மாதங்களில் தேயிலை இறக்குமதி 15 சதவீதம் சரிந்து 14.15 மில்லியன் கிலோவாக உள்ளது. இந்தியாவில் உள்ள 1600 தேயிலை தோட்டங்களில் 2 மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

**வரத்து அதிகரிப்பால் பூ விலை சரிவு**

டிசம்பர் 25,2011,10:34



திண்டுக்கல்:வரத்து அதிகரிப்பால், திண்டுக்கல்லில் பூக்களின் விலை குறைந்தது. அறுவடை நேரத்தில் விலை குறைந்ததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். திண்டுக்கல், நிலக்கோட்டை, நத்தம் பகுதிகளில் மல்லிகை, கனகாம்பரம், செவ்வந்தி, அரளி, சிந்தாமணி, சென்டு மல்லி, வாடமல்லி, அரளி, கோழிக்கொண்டை பூக்கள் பயிரிடப்படுகின்றன. இதற்காக திண்டுக்கல், நிலக்கோட்டையில் சந்தை செயல்படுகிறது.

இங்கிருந்து பிற மாவட்டங்கள் மற்றும் கேரளாவிற்கு அனுப்பப்படுகிறது. சில தினங்களாக வெள்ளை பூக்கள் (மல்லிகை, சம்பங்கி, காக்கரட்டான், பிச்சிப்பூ) விலை அதிகரித்த போதும், சென்டு மல்லி, வாடாமல்லி, சிந்தாமணி, செவ்வந்தி, கோழிக்கொண்டை பூக்களின் விலை இறங்குமுகமாக உள்ளது.நேற்று, மிகவும் குறைந்தது. செவ்வந்தி, வாடாமல்லி கிலோ ஐந்து ரூபாய்க்கும், சிந்தாமணி செவ்வந்தி ஒரு ரூபாய்க்கும் விற்றது. சென்டுமல்லி-15, கோழிக்கொண்டை-50 க்கும் விற்றது.இதுகுறித்து செங்குறிச்சி விவசாயி கருப்பன் கூறியதாவது:சிந்தாமணி செவ்வந்தி ஒரு ஏக்கரில் பயிரிட்டேன்.

ஒரு ஆண்டாக வளர்த்த நிலையில், கிலோ ஒரு ரூபாய்க்கு விற்கிறது. ஒரு ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் செலவிட்டேன். ஒரு நாளுக்கு பூக்களை பறிக்க, இருவருக்கு தலா 100 ரூபாய், செங்குறிச்சியில் இருந்து திண்டுக்கல் சந்தைக்கு கொண்டு வர 50 ரூபாய் கொடுக்க வேண்டும். இன்று, 250 ரூபாய் செலவழித்ததற்கு, 50 ரூபாய் கிடைத்துள்ளது. இனி, பூக்களை பறிக்காமலேயே விட முடிவு செய்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண் பொருட்கள் ஏற்றுமதி ரூ.57,595 கோடியாக உயர்வு**

டிசம்பர் 25,2011,04:22



புதுடில்லி:இந்தியாவின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, சென்ற மார்ச் மாதத்துடன் முடிவடைந்த, 2010-11ம் நிதியாண்டில், 57 ஆயிரத்து 595 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதாக, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாக, வேளாண்துறை விளங்குகிறது. விவசாயிகள் விளைவிக்கும் பல்வேறு விளை பொருட்கள், உள்நாட்டின் தேவைக்கு இன்றியமையாததாக உள்ளன. அதே சமயம், வேளாண் பொருட்களின் ஏற்றுமதி வாயிலாகவும், நம் நாட்டிற்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ்:இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அரிசி,கோதுமை, காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட, பல்வேறு வேளாண் பொருட்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.இது குறித்து, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:கடந்த மூன்று நிதியாண்டுகளாக, நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டு வருகிறது.

இந்தியாவின் வேளாண் பொருட்களை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அமெரிக்கா, சவுதி அரேபியா, வியட்னாம், வங்க தேசம், இந்தோனேஷியா, ஜப்பான், ஈரான், மலேசியா மற்றும் சீனா ஆகிய, 10 நாடுகள் அதிக அளவில், இறக்குமதி செய்து வருகின்றன.இந்தியாவில் இருந்து அதிக அளவில், வேளாண் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முதலிடத்தில் உள்ளது. கடந்த 2009 -10ம் நிதியாண்டில், இந்நாடுகளுக்கான வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, 5,637 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, 2009-10ம் நிதியாண்டில்,

5,707 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. சென்ற 2010-11ம் நிதியாண்டில், இந்த ஏற்றுமதி, 5,375 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது.

அமெரிக்கா:அதிக அளவில், இந்திய வேளாண் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் வரிசையில், அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்நாட்டிற்கான, இந்தியாவின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, கடந்த 2008-09ம் நிதியாண்டில், 4,292 கோடி ரூபாயாக இருந்தது. இது, 2009-10ம் நிதியாண்டில், 3,471 கோடி ரூபாயாகவும், 2010-11ம் நிதியாண்டில், 5,163 கோடி ரூபாய் என்ற அளவிலும் இருந்தது.

பட்டியலில், மூன்றாவது இடத்தில் உள்ள சவூதி அரேபியாவிற்கு, கடந்த 2008-09ம் நிதியாண்டில், 4,257 கோடி ரூபாய் மதிப்பிற்கு வேளாண் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது, 2009-10 மற்றும் 2010-11ம் நிதியாண்டுகளில், முறையே 4,369 கோடி மற்றும் 3,910 கோடி ரூபாயாக இருந்தது.வியட்னாம் நாட்டிற்கான வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, 2008-09 (2,619 கோடிரூபாய்), 2009-10(2,728 கோடி ரூபாய்), 2010-11 (3,409 கோடி ரூபாய்) என்ற அளவில் இருந்தது.

சீனா:இதே ஆண்டுகளில், வங்கதேசத்திற்கான ஏற்றுமதி,முறையே 2,619 கோடி,2,619 கோடி மற்றும்,2,619கோடி ரூபா யாக இருந்தது. இந்தோனேஷியாவிற்கான ஏற்றுமதி, முறையே 2,740 கோடி,3,164 கோடி மற்றும் 3,000 கோடி ரூபா யாக காணப்பட்டது.இதே ஆண்டுகளில்,ஜப்பான் (1,759 கோடி,1,388 கோடி,2,561கோடி ரூபாய்),ஈரான் (2,227 கோடி, 1,388 கோடி,2,526 கோடி ரூபாய்),மலேசியா(1,423 கோடி, 2,642 கோடி,2,503 கோடி ரூபாய்) மற்றும், சீனா (1,404 கோடி,1,204கோடி,2,436 கோடி) ஆகிய நாடுகளுக்கு, இந்தியாவின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள் ளன.

பிற நாடுகள்:இவற்றை தவிர, இதர நாடுகளுக்கான இந்திய வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, கடந்த 2008-09ம் நிதி யாண்டில், 18 ஆயிரத்து 749 கோடி ரூபாயாக இருந்தது. இது, 2009-10ம் நிதியாண்டில், 20 ஆயிரத்து 540 கோடி ரூபாயாகவும், 2010-11ம் நிதியாண்டில், 28ஆயிரத்து 649 கோடி ரூபாய் என்ற அளவிலும் உயர்ந்திருந்தது.

ஒட்டுமொத்த அளவில், இந்திய வேளாண் பொருட்களின் ஏற்றுமதி, கடந்த 2008-09ம் நிதியாண்டில், 52 ஆயிரத்து 149 கோடி ரூபாயாக இருந்தது.இது,2009-10ம் நிதியாண்டில்,48ஆயிரத்து662கோடிரூபாய் என்ற அளவில் காணப் பட்டது. சென்ற, 2010-11ம் நிதியாண்டில், இந்திய வேளாண் பொருட்களின் ஒட்டுமொத்த ஏற்றுமதி சிறப்பாக வளர்ச்சி

கண்டு, 57 ஆயிரத்து 595 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாட்டின் நெல் கொள்முதல் 2 கோடி டன்னை எட்டியது**

டிசம்பர் 25,2011,04:18



புதுடில்லி:டிசம்பர் மாதம் 23ம் தேதி வரையிலுமாக, நாட்டின் நெல் கொள்முதல் 2 கோடி டன்னை எட்டியுள்ளது என, இந்திய உணவு கழகம் தெரிவித்துள்ளது.நடப்பாண்டில், நாட்டில் விளைச்சல் அதிகரித்ததைத் தொடர்ந்து, நெல் கொள்முதல் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்திய உணவு கழகம் மற்றும் மாநில முகமை அமைப்புகள் மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

நடப்பு 2011-12ம் நிதியாண்டில், 3.53 கோடி டன் நெல் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. டிசம்பர் மாதம், 22ம் தேதி வரையிலுமாக, சந்தைக்கு, 2.60 கோடி டன் நெல் வந்துள்ளது. இதில், 2 கோடி டன் கொள்முதல் செய்யப் பட்டுள்ளது.கடந்த ஆண்டின் இதே காலத்தில், சந்தைக்கு வந்திருந்த,2.23 கோடி டன்னில்,1.80 கோடி டன் நெல் கொள் முதல் செய்யப்பட்டிருந்தது. அதேசமயம், கடந்த 2010-11ம் முழு நிதியாண்டில், 3.27 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில், அதிகளவில் நெல் உற்பத்தியாகும் பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில், கொள்முதல் செய்வது ஏறக்குறைய முடிவடைந்து விட்டது. ஆந்திரா, சட்டீஸ்கர், கர்நாடகா, மத்திய பிரதேசம், பீகார் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில், கரீப் மற்றும் ரபி பருவ நெல் விளைச்சல் வாயிலாக, நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் இலக்கு எட்டப் படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.டிசம்பர் 1ம் தேதி வரையிலுமாக, பஞ்சாபில், 1.13 கோடி டன், ஹரியானாவில், 23 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நடப்பு 2011-12ம் பருவத்தில், நாட்டில், 10.20 கோடி டன் நெல் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது, கடந்த பருவத்தில், 9.53 கோடி டன்னாக இருந்தது.

---

தினகரன்

**விளைச்சல் குறைந்தது முருங்கைக்காய் விலை கடும் உயர்வு**

பதிவு செய்த நாள் : 12/26/2011 12:35:47 AM



கோத்தகிரி : பனியின் தாக்கம் காரணமாக விளைச்சல் குறைந்ததால் கோத்தகிரியில் முருங்கைக்காய் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது.
நீலகிரி மாவட்டம், கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், பீன்ஸ் உள்ளிட்டவை அதிகளவில் பயிரிடப்படுகிறது. அதேசமயம், வெண்டைக்காய், கத்திரிக்காய், மாங்காய், முருங்கைக்காய் உள்ளிட்டவை பெரும்பாலும் சமவெளி பகுதியில் இருந்துதான் மலை மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

பனியின் தாக்கம் அதிகரித்து இருப்பதால் சமவெளி பகுதியில் காய்களின் விளைச்சல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மார்கழி மாதம் விரத காலம் என்பதால் ஐயப்ப, பழனி பக்தர்கள்

காய்களின் நுகர்வை அதிகரித்துள்ளனர். ஒரு கிலோ மாங்காய் முன்பு ஸி35க்கு விற்கப்பட்டது. தற்போது இது ஸி80 ஆக உயர்ந்துள்ளது. முருங்கைக்காய் ஒரு கிலோ ஸி40க்கு விற்பனை செய்யப்பட்டது தற்போது ஸி150க்கும் விற்கப்படுகிறது.

**2010ம் ஆண்டில் காபி நுகர்வு 6% உயர்வு**

பதிவு செய்த நாள் : 12/26/2011 12:35:08 AM



புதுடெல்லி : கடந்த 2010ம் ஆண்டில் நாட்டின் காபி நுகர்வு 6 சதவீதம் அதிகரித்து 1.08 லட்சம் டன்னானது. 2009ல் இது 1.02 லட்சம் டன்னாக இருந்தது.
தென்மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, கேரளாவில் அதிகம் விளையும் காபியை, வட இந்தியர்களே அதிகம் நுகர்கின்றனர். 2003&09க்கு இடையில் வட இந்தியாவில் காபி நுகர்வு 42 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**தேயிலை இறக்குமதி 14 சதவீதம் சரிவு**

பதிவு செய்த நாள் : 12/26/2011 12:32:54 AM



புதுடெல்லி: நடப்பு 2011&12ம் நிதியாண்டின் ஏப்ரல்&அக்டோபர் காலத்தில் தேயிலை இறக்குமதி 14 சதவீதம் குறைந்து 99.1 லட்சம் கிலோவானது. கடந்த ஆண்டின் இதே காலத்தில் இது 1.15 கோடி கிலோவாக இருந்தது. உலக அளவில் தேயிலை நுகர்வில் நம்நாடு முதலிடத்தில்

உள்ளதுடன், மொத்த உற்பத்தியில் 28 சதவீதத்துடன் 2ம் இடம் வகிக்கிறது.

இந்நிலையில் நடப்பு நிதியாண்டின் முதல் 7 மாதங்களில் அர்ஜென்டினா, ஈரான், இங்கிலாந்து தவிர்த்து கென்யா, நேபாளம், இலங்கை, சீனா, இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதியாகும் தேயிலை அளவு குறைந்தது. மறு ஏற்றுமதிக்கான தேவை குறைந்ததே இதற்கு காரணம். மேலும், 2011ன் ஜனவரி&அக்டோபரில் இறக்குமதி 15 சதவீதம் குறைந்து 1.41 கோடி கிலோவானதாக தேயிலை வாரியம் தெரிவித்தது.

---

## *முதல் முறையாக செயற்கைகோள் ஆய்வு கரும்பு பயிரிடும் பரப்பளவு அரசு மதிப்பீட்டை விட உயரும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு.பூனா*

*கரும்பு சாகுபடி பரப்பளவு குறித்து முதல் முறையாக செயற்கைகோள் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் கரும்பு பயிரிடும் பரப்பளவு, மத்திய அரசு மதிப்பீடுகளை விட 2–3 சதவீதம் அதிகரிக்கும் தெரிய வந்துள்ளது.*

*மூன்று மாநிலங்கள்*

*நாட்டின் கரும்பு உற்பத்தியில், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களின் ஒட்டுமொத்த பங்களிப்பு 70 சதவீதமாக உள்ளது.*

*செயற்கைகோள் ஆய்வு தந்துள்ள தகவல்களின்படி, 2011–12 பருவத்தில் கரும்பு சாகுபடி பரப்பளவு 51.82 லட்சம் ஹெக்டேராக இருக்கும். அதே சமயம் சர்க்கரை ஆலைகள் மேற்கொண்ட ஆய்வுகளின்படி இது 50.79 லட்சம் ஹெக்டேராக இருந்தது. மத்திய வேளாண் துறையின் மதிப்பீடு 50.93 லட்சம் ஹெக்டேராக இருந்தது. உணவு மற்றும் பொது விநியோக துறை அமைச்சகம் இது 50.25 லட்சம் ஹெக்டேராக இருக்கும் என தெரிவித்திருந்தது.*

*ஆக, இந்த மதிப்பீடுகளைக் காட்டிலும் கரும்பு பயிரிடும் பரப்பளவு அதிகரிக்கும் என செயற்கைகோள் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*உத்தரபிரதேசத்தில்...*

*கடந்த 2010–11 பருவத்தில் இப்பரப்பளவு 49.44 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இது,*

நடப்பு பருவத்தில் 2.38 லட்சம் ஹெக்டேர் விரிவடைந்து 51.82 லட்சம் ஹெக்டேராக உயரும் என செயற்கைகோள் வரைபட ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது. மத்திய வேளாண் அமைச்சகத்தின் மதிப்பீடுகளின்படி, உத்தரபிரதேசத்தில் கரும்பு சாகுபடி பரப்பு 22.52 லட்சம் ஹெக்டேராக இருக்கும். இது, மகாராஷ்டிராவில் 9.92 லட்சம் ஹெக்டேராக இருக்கும் என தெரிகிறது.

## ஊட்டியில் நிலவும் கடுங்குளிரால் தேயிலை செடிகள் கருகியது



ஊட்டியில் நிலவி வரும் கடுங்குளிரால் ஒரு தேயிலை எஸ்டேட்டில் உள்ள தேயிலை செடிகள் கருகி காணப்படும் காட்சி.

ஊட்டி, டிச.26–
ஊட்டியில் நிலவி வரும் கடுங்குளிர் காரணமாக தேயிலை செடிகள் கருகி வருகின்றன. இதனால் பச்சை தேயிலை மகசூல் குறைந்து வருகிறது.

பனி காலம்

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் நவம்பர் மாத இறுதியில் நீர் பனிப்பொழிவும், டிசம்பர் மாதத்தில் உறை பனி பொழிவும் காணப்படும். இந்த மாதங்களில் கடுங்குளிர் நிலவும் என்பதால் பெரும் பாலான செடிகள் குளிருக்கு தாக்குபிடிக்க முடியாமல் கருகி விடும். இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக கடந்த நவம்பர் மாதத்திலேயே உறை பனி பொழிவு காணப்பட்டது. ஆனால் மீண்டும் மழை பெய்தது. அதனை தொடர்ந்து வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதால் உறை பனி பொழிவு அதிகளவு இல்லை.

பனி பொழிவு

தற்போது கடந்த சில நாட்களாக ஊட்டியில் பகல் நேரத்தில் சுட்டெரிக்கும் வெயிலும், இரவில் கடுங்குளி ரும் நிலவுகிறது. அதிகாலை யில் உறை பனி கொட்டுவதால் தேயிலை செடிகள் கருகி வரு கின்றன. இதனால் பச்சை தேயிலை மகசூல் குறைந்து காணப்படுகிறது.
ஊட்டி, சோலூர்மட்டம், கிளன்மார்க்கன் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தேயிலை எஸ்டேட்டுகளில் தேயிலை செடிகள் கருகாமல் இருக்க அவற்றின் மீது சில்வர் ஓக் மரத்தின் இலைகள் மற்றும் காட்டு செடிகள் கொண்டு மூடப்பட்டு வருகிறது.

தொழிலாளர்கள் அவதி

பனி பொழிவால் காலை மற்றும் மாலை நேரங்களில் கடுங்குளிர் நிலவுகிறது. இதனால் தேயிலை தொழிலா ளர்கள் மற்றும் கூலி தொழிலா ளர்கள் வேலைக்கு செல்ல முடியாமல் கடும் அவதி அடைந்து வருகின்றனர்.
பச்சை தேயிலை மகசூலும் குறைந்து வருவதால் தொழி லாளர்கள் ஷிப்டு முறையில் பணியில்

அமர்த்தப்படுகின்ற னர். கொலக்கம்பை, தூதூர் மட்டம், கிளிஞ்சடா, சட்டன் உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டு இருந்த மேரக் காய் கொடிகள் கடுங்குளி ருக்கு தாக்கு பிடிக்க முடியாமல் கருகி விட்டது.

காய்கறிகள்

மேலும் பனி காரணமாக உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ், பீட்ரூட் உள்ளிட்ட காய்கறி செடிகளும் பாதிக்கப் பட்டு வருகின்றன. விவசாயி கள் தங்களது பயிர்களை காப்பாற்ற நாள்தோறும் தண்ணீர் பாய்ச்சும் பணியிலும் ஈடுபட்டு உள்ளனர்.

காலை நேரத்தில் நிலவும் கடுங்குளிரால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ–மாணவி கள் பெரும் அவதியடைந்து உள்ளனர். தொழிலாளர்கள், ஆட்டோ டிரைவர்கள் மாலை நேரங்களில் நெருப்பு மூட்டி குளிர் காய்கின்றனர்.

அரசு தாவரவியல் பூங்கா

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள புல்வெளி தான் சுற்றுலா பயணிகளை அதிகமாக கவர்கிறது. தற் போது நிலவும் கடுங்குளிரில் புற்கள் கருகாமல் இருக்க தினமும் காலை நேரத்தில் ‘பாப் அப்’ முறையில் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

முல்லை பெரியாறு அணை பிரச்சினையில் நீலகிரி வரும் கேரள மாநில சுற்றுலா பயணிகள் பெரும்பாலும் குறைந்து விட்டதால் முக்கிய சுற்றுலா தலங்கள் வெறிச் சோடி காணப்படுகிறது. ஊட்டியில் உள்ள சுற்றுலா பயணிகளும் சொட்டர் உள்ளிட்ட வெம்மை தரும் ஆடைகளை அதிகளவு அணிந்து வலம் வருகின்ற னர்.

## நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை பண்ணைகளில் விதைகள், நாற்றுகள் விற்பனைக்கு தயார் இணை இயக்குனர் ஆல்தொரை தகவல்

ஊட்டி, டிச.26–

நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் பல்வேறு வகையான நாற்றுகள், விதைகள் விற்பனைக்கு தயாராக உள்ளதாக மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் ஆல்தொரை தெரிவித்து உள்ளார்.

கல்லார்

ஊட்டி தோட்டக்கலை இணை இயக்குனர் ஜோ.ஆல்தொரை விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் தமிழ் நாடு அரசு தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் கீழ்க்கண்ட தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்படும் தரமான செடிகள், விதைகள் இருப்பில் உள்ளது. விவசாயிகள் சம்பந் தப்பட்ட பண்ணை , பூங்கா மேலாளரை அணுகி நாற்றுக் களை பெற்று கொள்ளலாம்.

கல்லார் அரசு தோட்டக் கலை பண்ணையில் தரமான மிளகு நாற்றுகள், சில்வர் ஓக் நாற்றுக்கள், பாக்கு நாற்றுகள், காப்பி நாற்றுகள், பலா கன்றுகள், குரோட்டன்ஸ், மலேயன் ஆப்பிள் நாற்றுகள், ஜாதிக்காய் நாற்றுகள், லிச்சி நாற்றுகள் விற்பனைக்கு உள்ளன. பர்லியார் அரசு தோட்டக் கலை பண்ணையில் தரமான கிராம்பு நாற்றுகள், ஜாதிக் காய் நாற்றுகள், ரோஸ் ஆப்பிள், பாக்கு, கிராம்பு நாற்றுகள், மணி பிளாண்ட், குரோட்டன்ஸ், சில்வர் ஓக் நாற்றுகள், காப்பி, துரியன் நாற்றுகள், லவங்க பட்டை நாற்றுகள் ஆகியவை விற்பனைக்கு தயாராக உள்ளது.

காட்டேரி அரசு தோட்டக் கலை பண்ணையில் தரமான தேயிலை நாற்றுகள், ரோஸ் மேரி நாற்றுகள், ரோஜா மொட்டு செடிகள், அழகு தாவரங்கள், எலுமிச்சை நாற்றுகள், சில்வர் ஓக் நாற்றுகள், பழ மரக்கன்றுகள் ஆகியவை விற்பனைக்கு உள்ளன.

அரசு பழவியல் நிலையம்

குன்னூர் அரசு பழவியல் நிலையத்தில் பிளம்ஸ், பீச், பேரி, ஆப்பிள், மாதுளம் போன்ற பழ நாற்றுகளும், குன்னூர் அரசு பழம் பதனிடும் நிலையத்தில் உற்பத்தி செய்யப் பட்ட ஜாம், ஜெல்லி, பழரசம் மற்றும் ஊறுகாய்கள் ஆகியன விற்பனைக்கு உள்ளது.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் சாம்பிராணி, போடோகார் பஸ் மற்றும் அழகு தாவரங்கள், மலர் விதைகள் ஆகியவை உள்ளது. இதனை வாங்கி விவசாயிகள் பயன் பெறலாம். ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் ரோஜா செடிகள், அழகு தாவரங்கள், கேக்டஸ் ரகங்கள், மலர் விதைகள் ஆகியவைகள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது.

ரோஜா பூங்கா

ஊட்டி அரசு ரோஜா பூங்காவில் ரோஜா கன்றுகள், பியூசியா வகை (அலங்கார செடிகள்) சாம்பிராணி மரக் கன்றுகள், மருத்துவ செடிகள் ஆகியவைகள் விற்பனைக்கு உள்ளது.

தொட்டபெட்டா அரசு தோட்டக்கலை பண்ணையில் தேயிலை நாற்று கள், ரோஸ்மேரி நாற்றுகள், தைம், குப்ரஸ் நாற்றுகள் விற்பனைக்கு உள்ளது.

கோல்கிரைன் அரசு தோட்டக்கலை பண்ணையில் தேயிலை நாற்றுகளும், கூடலூர் தேவாலா அரசு தோட்டக்கலை பண்ணையில் சில்வர் ஓக் நாற்றுகள், காப்பி, பாக்கு மற்றும் மிளகு நாற்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன.

ரூ.3.50

மேலும் தரமான தேயிலை பதியன் நாற்றுகள் தனியார் நாற்றங்கால் விலையினை விட குறைந்த விலையில் நாற்று ஒன்றுக்கு ரூ.3.50–க்கு காட்டேரி, தொட்டபெட்டா, கோல்கிரைன், நஞ்சநாடு, தேவாலா பண்ணைகளில் விற்பனை செய்யப்படு கிறது. விவசாயிகள் தரமான சில்வர் ஓக் நாற்றுகளை அரசு தோட்டக்கலை பண்ணை களில் பெற்று பருவமழை காலத்தில் நடவு செய்யுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார் கள். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.